**PRESS RELEASE**

# இந்தியாவினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் கலாச்சார நிலையம்

இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் ஒரு கலாச்சார மண்டபம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் முன்னிலையில் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ வை.கே. சிங்ஹ அவர்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி நிஹால் ஜயதிலக்க அவர்களும் கைச்சாத்திட்டனர் யாழ்ப்பாண மாநகர சபையால் உவந்தளிக்கப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகத்தின் அருகாமையிலமைந்துள்ள காணியில் இந்தக் கலாச்சார நிலையம் 36 மாதங்களில் அமைக்கப்படும். கலாச்சார நிலையமும் அதனருகில் அமைந்துள்ள புல்லுக்குளம் நீர்நிலையும் மிதக்கும் நாடக மேடையுடன் கூடிய முழுமையான ஒரு திறந்த வெளி அரங்காக மாற்றமடையச்செய்யப்படும்.

இலங்கை ரூபாய் 1.2 பில்லியன் தோராய மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கும் யாழ்ப்பாணம் கலாச்சார நிலையத்தின் நோக்கமானது வடமாகாண மக்களுக்கும், விசேஷமாக யாழ்ப்பாண மக்களுக்கும் யாழ்ப்பாண மக்களின் பண்டைய பாரம்பரிய கலாச்சாரத்தின் அடிப்படைகளை நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ளோருடன் பகிர்ந்து கொள்ளவும் அதற்குப் புத்துயிரளிக்கவும், மேம்படுத்தவும், பேணி வளர்க்கவும் உதவியாகவிருப்பதேயாகும். யாழ்ப்பாண மக்கள் பல் வேறுபட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச கலாச்சார உருவாக்கங்களை அநுபவிக்கவும் இந்நிலையம் உதவியாகவிருக்கும். பல்வேறுபட்ட கலாச்சாரக் கல்வித்துறைகளில் பயிற்சி பெறவும், நெறிப்படுத்தவும், அறிவு பெறவும் உதவியாற்றும். இந்த நிலையமானது இலங்கையில் வாழும் பல்வேறு சமூகங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் அபிவிருத்தியடையச்செய்யும் ஓர் அடையாளச் சின்னமாகவும் திகழும்.

இந்த நிலையமானது 600 பேர் அமா்ந்து பாா்க்கக்கூடிய ஆடலரங்கு பாணியில் நிழற்படக் காட்சி வசதிகளுடன் அமைந்துள்ள கேட்போா் கூடத்தையும் பல்தரச் சாதனங்களுடன் உடன் இணைப்பு வசதிகளுடன் கூடிய நூலகத்தையும், கண்காட்சிக் கூடத்தையும் அருங் காட்சியகத்தையும் கொண்டிருக்கும். அத்துடன் போதனை முறைகளுக்கான ஓா் பிரிவையும் வாய்ப்பாட்டு, வாத்திய சங்கீதம், நடனம், மொழிகள் போன்றவற்றிற்கான வகுப்புக்களை நடத்தும் வசதியையும் மொழிப்பயிற்சிக் கூடம் ஒன்றினையும் கொணடுள்ளதாகவிருக்கும். மகாநாடு மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கான அறைகளையும் உள்ளடக்கியதான இந்த நிலையம் ஒரு சமூகக் கலாச்சார நடவடிக்கைகளுக்கான மையமாகவும் திகழும்.

யாழ்ப்பாண கலாச்சார நிலையத்திற்கான தனித்துவம் வாய்ந்ததும் கலாச்சாரக் குறியீட்டுடன் அமைந்ததுமான வரைபடம் ஒன்றைத் தோ்ந்தெடுப்பதற்கான தேசிய வரை படப் போட்டியொன்றை நடத்தும் பொறுப்பு இலங்கைக் கட்டிடக் கலைஞா் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 29 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றினிடையே கட்டிடக் கலைஞா் மதுரா பிரேமதிலக்க என்பவரால் சமா்ப்பிக்கப்பட்ட வரைபடம் ஏகமனதாகத் தோ்ந்தெடுக்கப்பட்டது. தொழில் நுட்ப ஏற்குமை, சூழமைவு வடிவமைப்பு, அழகியல் மற்றும் கட்டிட அமைப்பு முறை, இடப்பரப்புக் கேற்ற அமைப்பு, அமைப்பிற்கான அடிப்படை, சுற்றாடலுக்கான சாதகம்:மற்றும் நீண்ட காலம் நிலைக்கக்கூடிய கட்டிடம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே வரைபட மதிப்பீடு செய்யப்பட்டது.

Colombo
June 9, 2014